**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 244/2022**
**நாள் 05/06/2024, புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - ஓம் ஹரிஹரன் | த/பெயர் - இளங்கோ |
| வயது - 33 | தொழில் - |
| விலாசம் - ஈஸ்வரன் கோயில் தெரு, சுண்ணாம்புகுளம் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். | |

**குறுக்கு விசாரணை (PW1)**

நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பணத்தை 3 மாதங்களில் தருவதாக கூறினார் ஆனால் தரவில்லை அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதியின் கணவர் பணத்தை பெற்றார் அவரின் மனைவி பெயரில் இடம் பதிவு செய்தார். எனது வழக்குரையில் பரதிவாதியின் கணவர் கடன் பெற்றார் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஆட்டோ மொபைல் கடை வைத்து நடத்திவருகிறேன். நான் மேற்படி எனது தகப்பனார் அந்த தொழில் செய்துவந்தார் நான் 2015ல் இருந்து நடத்திவருகிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

கூடுதல் சார்பு நீதிபதி,
பொன்னேரி.